**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 139/2019**

**Deposition of Witness for : PW 3**

| | |
|---|---|
| **Name** | : செல்வி. காவியா |
| **Father Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19-10-2023.**

**(Accused present)**

நீதிமன்ற கேள்வி

| | |
|---|---|
| உன்னுடைய பிறந்த தேதி என்ன | - 27.07.2008 |
| தற்போது எங்கு நின்று கொண்டிருக்கிறாய் தெரியுமா | - ஆம் நீதிமன்றத்தில் |
| என்ன படித்து கொண்டிருக்கிறாய் | - நான் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளி, ஆட்டியனூரில் 12ம் வகுப்பு படித்து வருகிறேன். . |
| பொய்யுக்கும் உண்மைக்கும் வித்தியாசம் தெரியுமா | - தெரியும் |
| இறந்து போன நபர் யார் என்ன உறவு | - என் தகப்பனார் சேகர் இறந்து விட்டார். |

**For the aforesaid answer given by the child, the court is satisfied that she has intellectual capacity to understand the questions and give rational answer competent enough to tender evidence.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது ஆட்டியனூர் கிராமத்தில் உள்ள அரசு பழக்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வருகிறேன். என் அம்மா கடந்த 10 வருடத்திற்கு முன்பு இறந்து விட்டார்கள். என் அம்மா இறந்த பிறகு என் தகப்பனார் அ.சா.1 ரேகாவை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். இறந்து போன சேகர் என் அப்பா. ஆஜர் எதிரியை தெரியும். 17.11.2017 மாலை 7 மணியளவில் சம்பவம் நடைபெற்றது. ஆத்துவாம்பாடி கிராமத்தில் என்னுடைய வீட்டில் என் சித்தி அ.சா.1 மற்றும் என் இரண்டு தம்பிகளுடன் இருந்தோம். என் இரண்டு தம்பிகளும் வீட்டினுள் தூங்கிக்கொண்டு இருந்தார்கள். அப்போது நானும், அசா.1 என் சித்தியும், என்

தகப்பனாரும் வீட்டிற்கு வெளியே இருந்தோம். அப்போது ஆஜர் எதிரி அவரது மனைவியுடன் வந்து வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்த என் அப்பாவை பார்த்து "தேவிடியா பையா நீ உயிருடன் இருந்தால் தானே இத்தோடு செத்து போடா" என்று திட்டி தன் கையில் கொண்டு வந்திருந்த கட்டையால் என் அப்பாவின் பின் மண்டையில் அடித்தார். அ.சா.1 என் சித்தி உடனே ஊர் மக்களை கூட்டி வர சென்று, வெங்கடேசன், மஞ்சுளா, சிவக்குமார், ராஜசேகர் ஆகியோரை அழைத்து வந்தார். மேற்சொன்னவர்கள் வருவதைப் பார்த்து எதிரி ஓடி விட்டார். அதன் பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலமாக என் தகப்பனாரை வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். என் அப்பா 18.11.2017ல் அடுக்கம்பாறை மருத்துவமனையில் இறந்து விட்டார். பிறகு என் சித்தி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> - இல்லை.

ஓம்/- காவியா

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.